# மின்வாரிய தொழிற்சங்கங்களின் கூட்டு நடவடிக்கைகுழு

மின்வாரிய தலைமையகம்
சென்னை 2

20.04.2017

அன்புடையீர்,

வணக்கம். மின்வாரிய தொழிற்சங்கங்களின் கூட்டு நடவடிக்கைக் குழு கடந்த 20.04.2017 அன்று தமிழ்நாடு மின்கழக தொழிலாளர் முன்னேற்ற சங்கத்தின் பொதுச் செயலாளர் திரு.சிங்கார.இரத்தினசபாபதி அவர்கள் தலைமையில் நடைபெற்றது.

அக்கூட்டத்தில் மின்சார தொழிலாளர் சம்மேளனம், கணக்காயர், களத் தொழிலாளர் சங்கம், தொழிலாளர் முன்னேற்ற சங்கம் மின்ஊழியர் மத்திய அமைப்பு (CITU) பொறியாளர் சங்கம், தொழிலாளர் ஐக்கிய சங்கம், INTUC (சேவியர்), NLO, அம்பேத்கார் யூனியன், பண்டகசாலை பணியாளர் சங்கம், மற்றும் ஊர்தி ஓட்டுநர் சங்கம், ஆகிய சங்கங்களின் தலைவர்கள் கலந்துக் கொண்டனர்.

அக்கூட்டத்தில் மினவாரிய ஊழியர்களின் பல்வேறு கோரிக்கைகள் சம்மந்தமாக விவாதம் நடைபெற்றது. விவாதத்திற்கு பின்னர் கீழ்கண்ட முடிவுகள் எடுக்கப்பட்டது.

1) வறட்சி நிவாரணம், கடன் ரத்து செய்தல், வறட்சியின் பாதிப்பால் உயிர்நீத்த விவசாயிகளுக்கு நிவாரணம் வழங்கிட வேண்டும் என்ற நியாயமான கோரிக்கைகளுக்காக போராடும் விவசாயிகளின் போராட்டத்திற்கு ஆதரவாக வட்ட மேற்பார்வை பொறியாளர் அலுவலகம் முன்பு மின்வாரியம் கூட்டு நடவடிக்கை குழு சார்பாக 25.04.2017 அன்று கூட்டு ஆர்ப்பாட்டம் நடத்திடுவது என முடிவு செய்யப்பட்டது.
   மேற்கண்ட முடிவை முழுமையாக நிறைவேற்ற கிளைகளில் தொழிற்சங்களின் கூட்டுக் குழு கூட்டத்தை நடத்தி அமலாக்கிட வேண்டுமாய் கேட்டுக்கொள்கிறோம்.
2) மத்திய அரசு ஊழியர்களுக்கு 7 வது ஊதியக்குழு அடிப்படையில் ஊதியம் வழங்கி உள்ள நிலையில் மாநில அரசு ஊழியார்களுக்கு ஊதியம் வழங்க குழு அமைத்துள்ள நிலையிலும் மின்வாரிய ஊழியர்களுக்கு இடைக்கால

நிவாரணமாக மாதம் தோறும் ரூ.2000/— என்ற அடிப்படையில் கடந்த 16 மாதங்களுக்கான நிலுவை தொகைகளையும் வழங்கிட வேண்டும்.

3) 31.12.2016ம் ஆண்டு வரை உள்ள கூடுதல் மின் இணைப்புகளுக்கு ஏற்ப பதவிகளை அனுமதித்து நிரப்பிட வேண்டும்.

4) ஆரம்பக்கட்ட பதவிகள் உள்ளிட்ட சுமார் 30,000 த்திற்கும் மேற்பட்ட காலிப் பணியிடங்களை உடனடியாக நிரப்பிட வேண்டும்.

5) உதவி கணக்கு அலுவலர் பதவி உயர்வுக்கு நிர்ணயக்கப்பட்ட கணக்கு தேர்வை தளர்த்தி பதவி உயர்வு வழங்கிட வேண்டும் என்பன போன்ற முடிவுகள் எடுக்கப்பட்டன.

சம்மேளனம்

தொ.மு.சங்கம் மத்திய அமைப்பு

LPF CITU

ஐ.என்.டி.யு.சி (சேவியர்)

பொறியாளர் சங்கம்

ஐக்கிய சங்கம் HMS

NLO

Dr. அம்பேத்கர் யூனியன்

பண்டக சாலை சங்கம்

G. KUMAR

ஊர்தி ஓட்டுனர்